Placement  Order Letter Issuse




தமிழ் கலைக்கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு

## பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி

மயிலம், ஜூலை.14–

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2017–18–ம் கல்வியாண்டில் இளங்கலை 3–ம் ஆண்டு படித்த மாணவ–மாணவிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதற்கு கல்லூரி முதல்வர் விஜயகாந்தி தலைமை தாங்கினார். எஸ்.ஆர்.எம். இன்போடெக் நிறுவன உரிமையாளர் நவீன் முன்னிலை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார். கல்லூரி செயலாளர் ராஜீவ்குமார் ராஜேந்திரன் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிய தேர்ந்தெடுக்கப்பட்ட 132 மாணவ–மாணவிகளுக்கு பணிநியமன ஆணையை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் கம்ப்யூட்டர் துறை பேராசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.

## மயிலம் தமிழ் கலைக்கல்லூரியில்

# மகளிர் விழிப்புணர்வு கருத்தரங்கு



மயிலம், அக்.3–

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. இதற்கு கல்லூரி செயலாளர் ராஜீவ்குமார் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் விஜயகாந்தி, துணை முதல்வர் திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி பேராசிரியர் சீனிவாசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக ரெக்சோனா நம்பிக்கை அகாடமி தலைமை நிர்வாக அதிகாரி ரிஸ்வானா கலந்து கொண்டு நடைமுறை வாழ்க்கையில் பெண்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் எனபேசினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.



# டெங்கு விழிப்புணர்வு முகாம்

மயிலம், ஆக.4–

மயிலம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதற்கு கல்லூரி செயலாளர் ராஜீவ்குமார் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்டம் பூச்சியியல் வல்லுநர் கஜபதி, மயிலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் விஜயகாந்தி வரவேற்றார்.

முகாமில் விழுப்புரம் மாவட்ட சுகாதார துறை துணை இயக்குனர் டாக்டர் பாலுசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, டெங்கு காய்ச்சல் வருமுன் தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவிகள் அனைவரும் சுகாதார உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். ஆய்வாளர்கள் துரைராஜ், கோபால், நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள், துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் சதீஷ் நன்றி கூறினார்.


இது நம்ம நாடு..
இனி இது நடக்கக்கூ
பாலியல் பாதிப்புகளில் இருந்து
பாதுகாக்க பெற்றோர்களுக்கான
வெண்பட்டுக்கூடு வ
பணம் சம்பாதிக்கும்
கிராமத்து மாணவர்
தேசிய வீரர்களாக்கு
மீன் வளர்ப்பு